**ஜனவரி – 19**

# TNPSC துளிகள்

- இந்தியாவின் 2020 ஆம் ஆண்டுக்கான அறிவியல் திரைப்பட விழாவின் ஐந்தாவது பதிப்பானது கோவாவின் பனாஜி நகரில் தொடங்கப்பட்டது.
- இரண்டு அடி மற்றும் இரண்டு அங்குலம் உயரம் கொண்ட உலகின் மிகக் குள்ளமான மனிதரான நேபாளத்தைச் சேர்ந்த ககேந்திர தாபா மகர் என்பவர் சமீபத்தில் இறந்து விட்டார்.

# தேசியச் செய்திகள்

## தனியார் சொத்து தொடர்பான உச்ச நீதிமன்றத் தீர்ப்பு

- தனியார் சொத்துக்களை வைத்திருப்பதற்கான குடிமகனின் உரிமையானது ஒரு தனி மனித உரிமை என்று உச்ச நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது.
- உரிய நடைமுறை மற்றும் சட்டத்தின் அதிகாரத்தைப் பின்பற்றாமல் அரசு அதைக் கைப்பற்ற முடியாது.
- ஒரு பொதுநல அரசாங்கத்தில், சொத்துரிமை என்பது மனித உரிமையாகக் கருதப் படுகின்றது.
- அரசானது தனியார் நிலத்தைக் கைப்பற்றி, பின்னர் அதனைச் சொந்தம் கொண்டாடுவது என்பது அரசை ஒரு ஆக்கிரமிப்பாளராக ஆக்குகின்றது.
- 1978 ஆம் ஆண்டில் ஏற்படுத்தப்பட்ட 44வது அரசியலமைப்புத் திருத்தமானது 300 - A சட்டப் பிரிவை இணைத்ததன் மூலம் சொத்துரிமையானது அடிப்படை உரிமைப் பகுதியிலிருந்து நீக்கப்பட்டது.
- ஆயினும் கூட, 300 - A சட்டப் பிரிவின் படி ஒரு நபரின் தனிப்பட்ட சொத்தைக் கைப்பற்றுவதற்கு உரிய நடைமுறை மற்றும் சட்டத்தின் அதிகாரத்தைப் பின்பற்ற வேண்டும்.
- சொத்துரிமையானது தற்போது ஒரு அரசியலமைப்பு சார்ந்த அல்லது சட்டரீதியிலான உரிமையாக மட்டுமல்லாமல், தனி மனித உரிமையாகவும் கருதப்படுகின்றது.
- நீதிபதிகள் இந்து மல்ஹோத்ரா மற்றும் அஜய் ரஸ்தோகி ஆகியோர் அடங்கிய அமர்வானது இந்தத் தீர்ப்பினை அறிவித்துள்ளது.

## சாலை விபத்துகள் குறித்த ஒருங்கிணைந்த தரவுதளம் (Integrated Road Accident Database - IRAD)

- இந்திய அரசாங்கமானது இந்த IRAD எனும் தரவுதளத்தை அறிமுகப் படுத்தியுள்ளது.
- முதன்முதலில் இந்த அமைப்பானது சாலை விபத்துகளினால் அதிக உயிரிழப்புகளைப் பதிவு செய்துள்ள கர்நாடகா, மத்தியப் பிரதேசம், மகாராஷ்டிரா, ராஜஸ்தான், தமிழ்நாடு மற்றும் உத்தரப் பிரதேசம் ஆகிய ஆறு மாநிலங்களில் சோதனை முறையில் இயக்கப்பட உள்ளது.
- IRAD கைபேசிச் செயலியானது புகைப்படங்கள் மற்றும் காணொளிகள் மூலமாக காவல்துறைப் பணியாளர்களுக்கு சாலை விபத்து பற்றிய விவரங்களைப் பதிவு செய்ய உதவும். அதைத் தொடர்ந்து அந்த விபத்து சம்பவம் தொடர்பான ஒரு தனிப்பட்ட அடையாள எண் உருவாக்கப் படும்.

- சாலை விபத்துக்கானக் காரணங்களைப் பகுப்பாய்வு செய்வதிலும், நாட்டில் இது போன்ற விபத்துக்களைக் குறைப்பதற்காகப் பாதுகாப்பு நடவடிக்கைகளை மேற்கொள்வதிலும் இது உதவும்.
- உலகிலேயே அதிக எண்ணிக்கையிலான சாலை விபத்துக்களை இந்தியா எதிர்கொள்கின்றது.

*இது பற்றி*

- இதை மதராஸ் இந்தியத் தொழில்நுட்ப நிறுவனமானது உருவாக்கியுள்ளது.
- இது தேசிய தகவல் மையத்தால் செயல்படுத்தப்பட உள்ளது.
- இந்தத் திட்டத்திற்கான செலவிற்கு உலக வங்கி நிதி உதவியளிக்கின்றது.

## ஆணையர் அலுவலக அமைப்பு முறை

- முன்னதாக கொல்கத்தா, மும்பை, ஹைதராபாத் மற்றும் சென்னை ஆகிய நான்கு நகரங்களில் மட்டுமே காவல்துறை ஆணையம் இருந்தது.
- இப்போது, உத்தரப் பிரதேச மாநிலத்தின் லக்னோ மற்றும் நொய்டா ஆகிய இடங்களிலும் இம்முறை செயல்படுத்தப்பட உள்ளது.
- ஆணையர் அலுவலக அமைப்பில், ஒருங்கிணைந்த காவல்துறைக் கட்டமைப்பின் தலைமைப் பொறுப்பை வகிக்கின்ற காவல்துறை ஆணையர் ஆனவர் நகரத்தில் உள்ள அனைத்துக் காவல் படைகளுக்கும் பொறுப்பானவர் ஆவார். அவர் மாநில அரசிற்குப் பதில் அளிக்கக் கூடியவர் ஆவார்.
- இந்த அமைப்பானது காவல்துறை ஆணையர்களாக நியமிக்கப்பட்ட பொதுக் காவல் ஆய்வாளரான (Inspector General of Police) ஐ.பி.எஸ் அதிகாரிகளுக்கு (இந்தியக் காவல் பணி) மாவட்ட ஆட்சியருக்கு உரிய அதிகாரங்கள் உட்பட கூடுதல் பொறுப்புகளையும் வழங்குகின்றது.

*நடைமுறை*

- காவல்துறை என்பது 1861 ஆம் ஆண்டின் காவல்துறைச் சட்டத்தின் அடிப்படையில் அமைந்துள்ளது.
- காலனித்துவ அமைப்பின் கீழ், ஒரு மாவட்டம் அல்லது பிராந்தியத்தின் ஒட்டுமொத்தப் பொறுப்பாளராக மாவட்ட ஆட்சியர் இருந்தார்; காவல்துறைக் கண்காணிப்பாளர் அவருக்கு அறிக்கை அளித்தார்.
- ஆனால் ஆணையர் அலுவலக அமைப்பின் கீழ், ஆணையர் ஆனவர் மாவட்ட ஆட்சியருக்கு அறிக்கை அளிக்க வேண்டியது இல்லை.
- அரசியலமைப்பின் ஏழாவது அட்டவணையின் கீழ், 'காவல்துறை என்பது மாநிலப் பட்டியலில் உள்ளது. அதாவது தனிப்பட்ட மாநில அரசுகளானவை பொதுவாக இந்த விஷயம் குறித்து சட்டமியற்றவும் அதனைக் கட்டுப்படுத்தவும் அதிகார வரம்புகளைக் கொண்டுள்ளன.
- மாவட்ட அளவில் "இரட்டை அமைப்பு முறைக் கட்டுப்பாடு" நடைமுறையில் உள்ளது. இதில் காவல்துறை நிர்வாகத்தைக் கண்காணிப்பதற்காக காவல்துறைக் கண்காணிப்பாளர் மாவட்ட ஆட்சியருடன் இணைந்துப் பணியாற்ற வேண்டும்.
- பெருநகர மட்டத்தில், இரட்டை அமைப்பினைக் கொண்ட பல மாநிலங்கள் ஆணையர் அலுவலக அமைப்பு முறைக்கு மாறியுள்ளன. ஏனெனில் சிக்கலான நகர்ப்புற மையப்படுத்தப்பட்ட பிரச்சனைகளைத் தீர்ப்பதற்கு விரைவான முடிவெடுப்பதை இந்தப் புதிய நடைமுறையானது அனுமதிக்கின்றது.

*எங்கே*

- பீகார், மத்தியப் பிரதேசம், ஜம்மு & காஷ்மீர் ஒன்றியப் பிரதேசம் மற்றும் சில வடகிழக்கு மாநிலங்களைத் தவிர கிட்டத்தட்ட அனைத்து மாநிலங்களும் ஆணையர் அலுவலக அமைப்பு முறையைக் கொண்டுள்ளன.
- ஆங்கிலேயர்கள் இந்த முறையை முதன்முதலில் கொல்கத்தாவில் அறிமுகப் படுத்தினர். பின்னர் மும்பை மற்றும் சென்னை மாகாணங்களில் பின்பற்றினர்.
- பிரதமர் மொரார்ஜி தேசாய் ஆட்சியின் போது தில்லி அரசாங்கமும் ஆணையர் அலுவலக அமைப்பு முறைக்கு மாறியது.

# அறிவியல் மற்றும் தொழில்நுட்பச் செய்திகள்

## GSAT-30

- இந்தியாவின் தொலைத்தொடர்பு செயற்கைக்கோளான GSAT-30 ஆனது புவி ஒத்திசைவு சுற்றுப்பாதையில் 2020 ஆம் ஆண்டு ஜனவரி 17 ஆம் தேதியன்று பிரெஞ்சு கயானாவின் கொரூ ஏவுதளத்திலிருந்து ஏரியன் -5 VA-251 என்ற விண்கலன் மூலம் வெற்றிகரமாக விண்ணிற்கு ஏவப்பட்டது.
- C மற்றும் Ku பட்டைகளில் புவி சுற்றுப்பாதையில் இருந்து தகவல் தொடர்பு சேவைகளை வழங்குவதற்காக இது இஸ்ரோவின் மேம்படுத்தப்பட்ட I-3K தொடர் கட்டமைப்பின் மூலம் கட்டமைக்கப்பட்டுள்ளது.




- 3357 கிலோ எடையுள்ள இந்த GSAT-30 செயற்கைக் கோளானது இன்சாட் - 4A விண்கலச் சேவைகளுக்கு மாற்றாக மேம்பட்ட பாதுகாப்புடன் செயல்பட உள்ளது.

- இந்த செயற்கைக் கோளானது Ku பட்டைகளின் வரம்பு எல்லைகளில் இருக்கும் இந்திய நிலப்பரப்பு மற்றும் இந்தியத் தீவுகள் ஆகிய பகுதிகளுக்குச் சேவைகளை வழங்குகின்றது. மேலும் C பட்டைகளின் வரம்பு எல்லைகளில் இருக்கும் வளைகுடா நாடுகள், ஏராளமான ஆசிய நாடுகள் மற்றும் ஆஸ்திரேலியா ஆகிய பகுதிகளுக்கு இது மேம்பட்ட சேவைகளை வழங்குகின்றது.
- சுற்றுப்பாதையின் உள்ளே செயல்படக் கூடிய GSAT-30 செயற்கைக் கோளின் ஆயுட்காலமானது 15 ஆண்டுகளுக்கும் அதிகமாக உள்ளது.

## H9N2 வைரஸ்

- இந்தியாவின் ஒரு அரிதான வகை H9N2 வைரஸால் ஏற்படக் கூடிய முதலாவது ஏவியன் இன்ஃப்ளூயன்ஸா அல்லது பறவைக் காய்ச்சல் நோயானது மகாராஷ்டிராவில் பதிவாகியுள்ளது.
- இந்தத் தொற்று நோயானது இன்ஃப்ளூயன்ஸா A வைரஸின் துணை வகையான ஒரு அரிதான வகை H9N2 வைரஸால் ஏற்படுகின்றது. இது மனிதக் காய்ச்சலுக்கும் பறவைக் காய்ச்சலுக்கும் வழிவகுக்கின்றது.
- பொதுவாக இந்த வைரஸ்களானவை காடுகளில் வாழும் பறவைகளில் காணப் படுகின்றன மற்றும் சில நாடுகளில் கோழிப் பண்ணையில் காணப் படுகின்றன.

## ஆர்ட்டிமிஸ் திட்டம்

- 2024 ஆம் ஆண்டுக்குள் விண்வெளி வீரர்களை சந்திரனின் மேற்பரப்பிற்கு திருப்பி அனுப்புவதற்கான நாசா அமைப்பின் ஒரு புதிய திட்டத்தின் பெயர் ஆர்ட்டிமிஸ் என்பதாகும்.
- நாசா அமைப்பானது 2024 ஆம் ஆண்டு வாக்கில் சந்திரனுக்கு, குறிப்பாக சந்திரனின் தென் துருவப் பகுதிக்கு, முதலாவதாக ஒரு பெண்ணையும் அதற்குப் பின் மற்றொரு ஆணையும் அனுப்ப இருக்கின்றது.
- இந்தத் திட்டதிற்குத் தேர்ந்தெடுக்கப்பட்டவர்களில் அமெரிக்கவாழ் இந்தியரான ராஜா சாரியும் ஒருவராவார்.



# சுற்றுச்சூழல் செய்திகள்

## இந்திய நாகத்தின் மரபணு

- சர்வதேச ஆராய்ச்சியாளர்கள் குழுவானது இந்திய நாகத்தின் மரபணுக்களை வரிசைப் படுத்தியுள்ளது.
- ஆராய்ச்சியாளர்கள் பாம்புக்கடிச் சிகிச்சையில் முக்கியமானயாகக் கருதப்படுகின்ற

19 முக்கிய நச்சுத் தன்மை கொண்ட மரபணுக்களை இந்திய நாகத்தின் மரபணுவில் அடையாளம் கண்டுள்ளனர்.

- இந்த மரபணு வரிசையின் மூலம் பயனுள்ள எதிர்ப்பு விஷத்தை உருவாக்குவதற்கான சாத்தியக் கூறுகளைப் பெற முடியும்.
- இந்தியாவில், கீழ்க்கண்ட நான்கு பெரிய பாம்பு இனங்கள் எதிர்ப்பு விஷத்தை உருவாக்குவதற்கான சவாலை உண்டாக்குகின்றன. அவையாவன
    - இந்திய நாகம் (நஜா நஜா),
    - நல்ல பாம்பு (புங்கரஸ் கெருலியஸ்),
    - ரஸ்ஸலின் கட்டு விரியன் (டபோயா ரஸ்ஸெலி), மற்றும்
    - சுருட்டை விரியன் (எச்சிஸ் கரினாட்டஸ்).
- இந்த 4 இனங்கள் வடகிழக்கு இந்தியாவில் காணப்படுவதில்லை. ஆனால் இப்பகுதியில் கணிசமான எண்ணிக்கையிலான பாம்புக்கடிகள் ஏற்பட்டதாக ஆய்வுகள் தெரிவிக்கின்றன.
- இந்தியாவானது உலகின் பாம்புக் கடி தலைநகரமாகக் கருதப் படுகின்றது.
- இந்தப் பெரிய, 4 வகையான பாம்பு இனங்கள் காரணமாக இந்தியாவில் மட்டும் ஆண்டுதோறும் சுமார் 50,000 இறப்புகள் நிகழ்கின்றன.

# மாநிலச் செய்திகள்

## இசட் மோர் சுரங்கம்

- ஜம்மு-காஷ்மீரில் 6.5 கிலோமீட்டர் நீளமுள்ள இசட்-மோர் சுரங்கப் பாதையை நிறைவு செய்வதற்கான சலுகை ஒப்பந்தமானது சாலைப் போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் நிதின் கட்கரி முன்னிலையில் கையெழுத்தானது.
- இசட்-மோர் சுரங்கமானது ஜம்மு-காஷ்மீரில் உள்ள சோன்மார்க் என்னும் சுற்றுலா இடத்திற்கு அனைத்து வானிலைகளையும் தாங்கக் கூடிய ஒரு சாலை இணைப்பை வழங்க உள்ளது.




- தேசிய நெடுஞ்சாலை எண் - 1ல் உள்ள ககாங்கீர் மற்றும் சோன்மார்க் ஆகிய இடங்களுக்கு இடையே இரு வழிப் பாதைகள் கொண்ட சுரங்கப்பாதையாக இது அமைய உள்ளது.
- கடுமையானப் பனிப்பொழிவின் காரணமாக குளிர் காலத்தில் இது பெரும்பாலும் மூடப் பட்டிருக்கும்.

- இசட்-மோர் சுரங்கம் என்பது இந்தியாவின் லடாக் பிராந்தியத்தில் உள்ள ஸ்ரீநகர் மற்றும் கார்கில் பகுதிகளுக்கு இடையேயான ஒரு சுரங்கப் பாதையாகும்.
- சோன்மார்க் மற்றும் ககாங்கீருக்கு இடையிலான சாலையின் இசட் உருவாக்கம் காரணமாக இந்த சுரங்கப் பாதையானது இந்தப் பெயரைப் பெற்றுள்ளது.

### அஷ்பகுல்லா கான் உயிரியல் பூங்கா

- கோரக்பூரில் ஷாஹீத் அஷ்பகுல்லா கான் என்று பெயரிடப்பட்ட ஒரு விலங்கியல் பூங்காவினை நிறுவும் திட்டத்திற்கு உத்தரப் பிரதேச அமைச்சரவை ஒப்புதல் அளித்து உள்ளது.
- தற்போது, உத்தரப் பிரதேசத்தில் லக்னோ மற்றும் கான்பூர் ஆகிய இடங்களில் இரண்டு விலங்கியல் பூங்காக்கள் உள்ளன.
- 1925 ஆம் ஆண்டில் காகோரி சதி என்று பொதுவாக அறியப்படும் காகோரி ரயில் கொள்ளைச் சம்பவத்தின் காரணமாக ராம் பிரசாத் பிஸ்மில் என்பவருடன் சேர்த்து சுதந்திரப் போராட்ட வீரரான அஷ்பகுல்லா கானுக்கு மரண தண்டனை விதிக்கப் பட்டது.

## பிரபலமானவர்கள், விருதுகள், மற்றும் நிகழ்வுகள்

### மாதிரி விளையாட்டுக் கிராமங்கள்

- உத்தரப் பிரதேசத்தைச் சேர்ந்த பகதூர்பூர் மற்றும் கெரி விரான் ஆகிய இரண்டு கிராமங்களும் இந்தியாவின் முதலாவது மாதிரி விளையாட்டுக் கிராமங்களாக உருவெடுத்துள்ளன.
- இது நாட்டில் விளையாட்டுக் கலாச்சாரத்தை உருவாக்குவதற்காக காசியாபாத்தில் உள்ள மேலாண்மைத் தொழில்நுட்ப நிறுவனத்தினால் செயல்படுத்தப்படும் திட்டத்தின் ஒரு பகுதியாகும்.

★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★